# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## செய்தி வெளியீடு

எண். 145/2024 நாள்:12/12/2024

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குடிமைப்பணிகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பும் பொருட்டு ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வுகளை நடத்தி வருகிறது.

தேர்வர்களின் நலன் கருதியும், தெரிவுப்பணிகளை விரைவுபடுத்தவும், 2024-ம் ஆண்டு நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வுகளின் முடிவுகள் 2022-ம் ஆண்டை ஒப்பிடுகையில் விரைவாக வெளியிடப் பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-I (தொகுதி I பணிகள்)-க்கான முதல்நிலைத் தேர்வு முடிவுகள் 33 வேலை நாட்களுக்குள்ளும், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-II (தொகுதி II மற்றும் IIA பணிகள்)-க்கான முதல்நிலைத் தேர்வு முடிவுகள் 57 வேலை நாட்களுக்குள்ளும், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-IV (தொகுதி IV பணிகள்)-க்கான தேர்வு முடிவுகள் 92 வேலை நாட்களுக்குள்ளும் வெளியிடப் பட்டுள்ளன.

**ச. கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,**
செயலாளர்